தேதி 30.08.2025 நேரம் மாலை 6.10 மணி

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு. நரேந்திர மோடி 25ஆவது ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு உச்சி மாநாட்டில் கலந்துகொள்ள இன்று சீனா சென்றுள்ளார்.

நாட்டின் முதல் tempered glass உற்பத்தி ஆலையை மத்திய அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் உத்தர பிரதேச மாநிலம் நொய்டாவில் இன்று திறந்து வைத்தார்.

போதைப் பொருள் பழக்கத்தினை தடுப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், நடைபெறும் கிரிக்கெட் போட்டிகளை புதுச்சேரி சட்டப்பேரவைத் தலைவர் திரு. செல்வம் இன்று தொடக்கி வைத்தார்.

புதுச்சேரி ஜிப்மர் இயக்குநர் டாக்டர் வீர் சிங் நேகி, புதுடெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையுடன் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

*மோடி -1 (16 )*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, 25ஆவது ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள இன்று Tianjin

சென்றடைந்தார். அங்கு அவருக்கு இந்திய வம்சாவளியினரால் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. திரு. மோடிக்கு அளிக்கப்பட்ட வரவேற்பின்போது சீன இசைக்குழுவினர் வந்தே மாதரம் பாடலையும் இசைத்தனர். சீன அதிபர் திரு. Xi Jin Ping-ன் அழைப்பின் பேரில் சீனா சென்றுள்ள பிரதமர் நாளையும், நாளை மறுநாளும் அங்கு நடைபெறும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாட்டில் பங்கேற்கிறார். பிராந்திய பாதுகாப்பு, நிலையான வளர்ச்சி மற்றும் உலகளாவிய ஒத்துழைப்பு உள்ளிட்டவை குறித்து இம்மாநாட்டின்போது விவாதிக்கப்பட உள்ளது. ஷாங்காய் உச்சி மாநாட்டின் 25 ஆண்டு கால சாதனைகள் மதிப்பாய்வு செய்யப்பட்டு மேம்பாட்டுக்கான புதிய யோசனைகளும், மேற்கொள்ளப்பட உள்ளன. இம்மாநாட்டில் ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புடின் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட பல்வேறு நாட்டுத் தலைவர்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளின் தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

*மோடி -2 ( 14 )*

முன்னதாக, ஜப்பான் சென்ற பிரதமர் அந்நாட்டைச் சேர்ந்த 16 மாகாணங்களின் ஆளுநர்கள் பங்கேற்ற கூட்டத்தில் உரையாற்றினார். அப்போது இரு நாடுகளுக்கும் இடையே வர்த்தகம், தொழில்நுட்பம், சுற்றுலா, பாதுகாப்பு மற்றும் கலாச்சாரம் உள்ளிட்ட துறைகளில்

தொடர்ந்து முன்னேற்றம் ஏற்பட்டு வருவதாக பிரதமர் கூறினார். மேலும், ஜப்பான் மாகாண ஆளுநர்கள் இந்தியாவின் வளர்ச்சி பயணத்தில் பங்கேற்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். பின்னர், ஜப்பான் பிரதமர் திரு. Shigeru Ishiba-வுடன் புல்லட் ரயில் மூலம் Sendai சென்று அங்குள்ள டோக்கியோ எலக்ட்ரான் தொழிற்சாலையைப் பார்வையிட்டார். அந்நாட்டு பிரதமருடன் செமி கண்டக்டர் உற்பத்தி தொடர்பாக கலந்துரையாடிய பிரதமர், செமி கண்டக்டர் துறையில் இந்தியா கடந்த சில ஆண்டுகளாக முன்னேறி வருவதாகவும், இத்துறையின் வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு முக்கியமானது என்றும் குறிப்பிட்டார்.

*அஸ்வினி வைஷ்ணவ் (17)*

நாட்டின் முதல் tempered glass உற்பத்தி ஆலையை மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் உத்தர பிரதேச மாநிலம் நொய்டாவில் இன்று திறந்து வைத்தார். இந்த ஆலை நாட்டின் மின்னணு உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையிலும், make in India முயற்சியினை வலுப்படுத்தும் விதமாகவும் தொடங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியில் பேசிய திரு.அஸ்வினி வைஷ்ணவ், மின்னணு உற்பத்தியில் இந்தியா கடந்த பல ஆண்டுகளாக குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது என்று கூறினார். மொபைல்

போன், மடிக்கணினி போன்ற சாதனங்களுக்கான உதிரி பாகங்கள் அனைத்தும் நடப்பாண்டு இறுதிக்குள் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். இத்தகைய மின்னணு பொருட்களின் உற்பத்தி கடந்த 11 ஆண்டுகளில், முன்பிருந்ததைக் காட்டிலும், 6 மடங்கு அதிகரித்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். இளைஞர்கள் கடினமாக உழைத்து சுயசார்பு இந்தியா மற்றும் வளர்ச்சியடைந்த பாரதம் 2047 என்ற தொலைநோக்கு பார்வைக்கு பங்களிக்குமாறு திரு அஸ்வினி வைஷ்ணவ் அழைப்பு விடுத்தார்.

*சிவ்ராஜ் சிங் சௌஹான் (7)*

தேசிய சிறு தொழில் தினம் இன்று கொண்டாடப்படுகிறது. இதனையொட்டி மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு. சிவ்ராஜ் சிங் சௌஹான் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், சிறு தொழில்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெரும் பங்கு வகிப்பதாகவும் கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதாகவும் கூறியுள்ளார். மேலும் உள்நாட்டு உற்பத்திக்கு ஆதரவு அளிப்போம் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

*புதுச்சேரி செல்வம் (8)*

இளைஞர்களிடையே அதிகரித்து வரும் போதைப் பொருள் பழக்கத்தினை தடுப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், புதுச்சேரி, தவளக்குப்பத்தை அடுத்த பெரியக்காட்டுப்பாளையத்தில் கிரிக்கெட் போட்டிகள் நடைபெறுகின்றன. புதுச்சேரி, கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களிலிருந்து மொத்தம் 20 அணிகள் இப்போட்டிகளில் பங்கேற்கின்றன. இன்று தொடங்கி 5 நாட்கள்,நடைபெறும் இந்தப் போட்டிகளை புதுச்சேரி சட்டப்பேரவைத் தலைவர் திரு. செல்வம் தொடக்கி வைத்துப் பேசுகையில்,

.... வாய்ஸ் ....

*மனோகர்லால் (7)*

மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை தூய்மையாக வைத்திருப்பதில் கவனம் செலுத்துமாறு மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. மனோகர்லால் அறிவுறுத்தியுள்ளார். இன்று காணொளி காட்சி மூலம் நடைபெற்ற தூய்மை இந்தியா 2.0 இயக்கம் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் தலைமையேற்று உரையாற்றிய அமைச்சர், தூய்மையும், நகர்ப்புற மேம்பாடும் நாணயத்தின் இரு பக்கங்கள் என்று கூறினார்.

*கனமழை ஏனாம் (6)*

தெலங்கானா மற்றும ஆந்திர பிரதேச மாநிலங்களில் பெய்து வரும் கனமழை காரணமாக, கோதாவரி ஆற்றில் வெள்ளப்பெருக்கு அபாயம் ஏற்பட்டுள்ளதை தொடர்ந்து, டௌலேஸ்வரம் தடுப்பணையிலிருந்து உபரி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. இதனால் ஏனாமில் பாதிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் கடற்கரைப் பகுதிகளில் இன்று ஆய்வு மேற்கொண்ட ஏனாம் மண்டல நிர்வாகி திரு.ஆர்.முனுசாமி பேசுகையில்,

.... வாய்ஸ் ....

*ஜிப்மர் (7)*

புதுச்சேரி ஜிப்மர் இயக்குநர் டாக்டர் வீர் சிங் நேகி, புதுடெல்லி எய்ம்ஸ் மருத்துவமனை இயக்குநர் டாக்டர் ஸ்ரீனிவாசை சந்தித்து, 2 மருத்துவ நிறுவனங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து ஆலோசனை மேற்கொண்டார். நோயாளிகள் பராமரிப்பு, மருத்துவக் கல்வியை மேம்படுத்துவது, மற்றும் கூட்டு ஆராய்ச்சி முயற்சிகளை ஊக்குவிப்பது உள்ளிட்டவை குறித்தும் இந்த ஆலோசனை நடைபெற்றது.

*மன் கீ பாத் (10)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாட்டு மக்களுடன் தமது எண்ணங்களை பகிர்ந்து கொள்ளும், 125 ஆவது மன் கீ பாத் என்னும்

மனதின் குரல் நிகழ்ச்சி, ஆகாஷ்வாணியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாக உள்ளது. இந்நிகழ்ச்சி ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷனின் அனைத்து அலைவரிசைகளிலும், AIR செய்தி வலைதளத்திலும், Newsonair மொபைல் செயலியிலும் இடம் பெறுகிறது. ஆகாஷ்வாணியில், பிரதமரின் ஹிந்தி உரையை தொடர்ந்து, அதன் பிராந்திய மொழி வடிவம் இடம் பெறும். நாளை இரவு 8 மணிக்கு பிரதமர் உரையின் தமிழ் வடிவம் புதுச்சேரி மற்றும் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து வானொலி நிலையங்களிலும் மறு ஒலிபரப்பு செய்யப்படும்.

*வந்தே பாரத் (5)*

மங்களூரு-திருவனந்தபுரம் இடையே இயக்கப்படும் வந்தே பாரத் விரைவு ரயிலில் மேலும் 4 பெட்டிகள் சேர்க்கப்பட்டு, 20 பெட்டிகள் கொண்ட ரயிலாக மேம்படுத்தப்பட்டுள்ளது. அதிகரித்து வரும் பயணிகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் இந்த சேவை தொடங்கப்பட்டுள்ளதாக மத்திய ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

*ஹாக்கி ஆசியக் கோப்பை (4)*

ஆசியக் கோப்பை மகளிர் ஹாக்கி போட்டியில் பங்கேற்பதற்காக, Salima Tete தலைமையிலான 20 பேர் கொண்ட இந்திய அணி இன்று

பெங்களூரிலிருந்து சீனா சென்றுள்ளது. அடுத்த மாதம் 5ஆம் தேதி தொடங்கி 14ஆம் தேதி வரை இப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய மகளிரணி குரேஷியா புறப்பட்டுச் சென்றுள்ளது.

*வானிலை (6)*

மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக தமிழ்நாட்டின் ஓரிரு இடய்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இன்று தொடங்கி 3 நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும், ஓரிரு இடங்களில் பலத்த தரைக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி 25ஆவது ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு உச்சி மாநாட்டில் கலந்துகொள்ள இன்று சீனா சென்றுள்ளார்.

நாட்டின் முதல் tempered glass உற்பத்தி ஆலையை மத்திய அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் உத்தர பிரதேச மாநிலம் நொய்டாவில் இன்று திறந்து வைத்தார்.

போதைப் பொருள் பழக்கத்தினை தடுப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், நடைபெறும் கிரிக்கெட் போட்டிகளை புதுச்சேரி சட்டப்பேரவைத் தலைவர் திரு. செல்வம் இன்று தொடக்கி வைத்தார்.

புதுச்சேரி ஜிப்மர் இயக்குநர் டாக்டர் வீர் சிங் நேகி, புதுடெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையுடன் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது SS/CN/VM